அ.வ.எண்: 84/2023 நாள்: 01.04.2026

பி.வா.சா.2 –

மணிகண்டன்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்ததா என்றால் வரவில்லை. 1 ம் பிரதிவாதி என் தந்தை என்றால் சரிதான். வாதிகள் தாவா வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் பாதை கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள். 1ம் பிரதிவாதி உடல்நிலை சரியில்லாததால் சாட்சியம் அளிக்க வரவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவர் உடல்நிலை சரியில்லை என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது நிரூபண வாக்குமூலம் மற்றும் எதிர்வழக்குரைக்கான விவரங்களை யார் கூறியது என்றால் நான்தான் கூறினேன். தாவா 1ம் இலக்க சொத்தை வாதிகள் எப்பொழுது இருந்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் 2003 ஆம் ஆண்டு முதல் அனுபவம் செய்து வருகிறார்கள். தாவா 1ம் இலக்க சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும் சர்வே எண் 904 ஆகும். தாவா 1ம் இலக்க சொத்தின் விஸ்தீரணம் என்னவென்றால் 52 சென்ட் ஆகும்.

வாதி 1ம் இலக்க சொத்திற்கு 2–ஆம் இலக்க சொத்தை தான் பாதையாக கடந்த 60 வருடங்களாக உபயோகித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

2. வாதிகள் 1ம் இலக்க சொத்தை கிரையம் வாங்கும் பொழுதும், வீடு கட்டும் பொழுதும் எனக்கு சுமார் 4 வயது தான் இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. அவர்கள் எப்பொழுது வீடு கட்டினார்கள் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. நான் 2003 ஆம் ஆண்டு முதல் வாதிகள் 1ம் இலக்க சொத்தை அனுபவம் செய்து வந்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் பிறந்த தேதி என்ன என்றால் 30.03.1999 ஆகும். வாதிகள் 1ம் இலக்க சொத்தை கிரையம் வாங்கும் பொழுது எனக்கு 4 வயது இருக்கும் என்றால் சரிதான். தாவா 2ஆம் இலக்க சொத்தான சர்வே எண்கள் 411/4,6, 7, 8 ஆகியவற்றிற்கு சட்டவிரோதமாக ஒரே குடும்பத்து ஆட்களின் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்களுக்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் சர்வே எண் 411/4–க்கு ராஜேந்திரன் என்பவர் பெயரிலும், சர்வே எண் 411/6–க்கு முத்து என்பவர் பெயரிலும், சர்வே எண் 411/7–க்கு பாக்கியம் என்பவர் பெயரிலும், சர்வே எண் 411/8–க்கு பூங்கோதை பெயரிலும் பட்டா ஏற்பட்டுள்ளது. மேற்படி 4 நபர்களும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

3. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 நபர்கள் பெயரில் போலியான ஆவணங்களை கொடுத்து சட்டவிரோதமாக பட்டா வாங்கப்பட்டுள்ளது

என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண்களுக்கு மேற்படி 4 நபர்களின் பெயரில் பட்டா இருப்பதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சர்வே எண்கள் 411/ 4, 6, 7, 8 ஏற்பட்ட பட்டாக்களை ரத்து செய்வது சம்பந்தமாக வாதி தேவகோட்டை வட்டாட்சியர் அவர்களிடம் மனு கொடுத்திருப்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி பட்டா ரத்து சம்பந்தமான வழக்கு எண் மற்றும் அதில் சம்பந்தப்பட்ட நபர்களின் பெயர்கள் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண் 411/5–ல் பாதை இருப்பதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண் 411/5–ல் பாதை இல்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னாள் சரியல்ல, பாதை உள்ளது.

4. தாவா வழக்கின் 2–ஆம் இலக்க சொத்தை தான் வாதிகள் தற்போது வரை பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா 2–ஆம் இலக்க சொத்தான பாதையை அடைத்து வைத்து வாதிகள் பாதையாக பயன்படுத்தி வருவதை தடுத்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல அது எங்களின் பட்டா இடமாகும். தாவா 1ம் இலக்க சொத்திற்க்கு வேறு வழியில் பாதை இல்லாததால் தாவா 2ஆம் இலக்க சொத்தின் வழியாக பாதை விடுவதற்கு நான் வசதியுரிமை சட்டத்தின் கீழ் கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல, அவர்களுக்கு சர்வே

எண். 411/5-ல் பாதை உள்ளது. சர்வே எண் 411/5-ல் எந்த திசையில் பாதை உள்ளது மற்றும் அதன் நீள அகலம் என்ன என்பது குறித்த விபரங்களை நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 411/5-க்கு எந்த திசையில் வாதிகளின் 1ம் இலக்க சொத்து உள்ளது என்று நான் எனது நிரூபண வாக்குமூலத்திலோ அல்லது எதிர் வழக்குரையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல கூறியுள்ளேன்.

5. சர்வே எண் 411 /5-க்கு எந்த திசையில் 1ம் இலக்க சொத்து உள்ளது என்றால் கிழக்கு திசையில் உள்ளது. நான் 1ம் பிரதிவாதியின் மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு தாவா வழக்கை பற்றிய விபரங்களோ அல்லது தாவா சொத்துக்கள் பற்றிய விபரங்களோ தெரியவில்லை என்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் சர்வே எண் 411/5 ல் பாதை இல்லை என்றும், தாவா 2-ஆம் இலக்கச் சொத்தின் வழியாகத்தான் வாதிகள் பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. வாதிகளுக்கு அவர்கள் வீட்டை விட்டு வெளியே வருவதற்கு கூட பாதை இல்லை என்பதால் தாவா 2 ஆம் இலக்க சொத்தின் வழியாக பாதை விட வேண்டும் என்றும், அதனால் வசதியுரிமை சட்டத்தின் கீழ் தாவா வழக்கும் அனுமதிக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் நஞ்சை நிலத்தில் வீடு கட்டி உள்ளார்கள், அவர்களுக்கு கிழக்கு

மேற்காகவும் தெற்கு வடக்காகவும் பாதை உள்ளது.

6. மேற்படி உண்ணாமலைக்கு சொத்திற்கு கிழக்கு மேற்காகவும் தெற்கு வடக்காகவும் பாதை இருப்பதற்கான புகைப்படங்களோ அல்லது வருவாய்த்துறை ஆவணங்களோ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் SFI நகலை தாக்கல் செய்துள்ளேன். (சாட்சியிடம் பி.வா.சா.ஆ. 1 ஆவணம் காட்டப்பட்டது) நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தில் எங்கும் பாதை இருப்பதாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 411/5 பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.04.01 16:07:56 +0530